# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
# S.C. 31/2025
## Prosecution Witness : 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | திரு. பெஞ்சமின் பிரிட்டோ | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | திரு. பிளமின்ராஜ் | **Calling** | **:** | மரக்கடை வேலை |
| **Village** | **:** | மேட்டுப்பட்டி | **Religion** | **:** | கிறிஸ்துவர் |
| **Taluk** | **:** | திண்டுக்கல் | **Age** | **:** | **37** |
| | | | **Dated** | **:** | **11.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 6), **திரு. பெஞ்சமின் பிரிட்டோ** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மரக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். 23.05.2024ம் தேதி இரவு சுமார் 11.00 மணி அளவில் நானும், சாம்தீபக் என்பவரும் சம்பவ இடத்தில் பேசிக் கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய போலீசார் வந்து, சம்பவ இடத்தை லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்தார்கள். மேற்படி பார்வை மகஜரில் நானும், சாம்தீபக்கும் கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகஜரில் அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சம்பவ இடத்தை யார் போலீசுக்கு அடையாளம் காட்டினார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எத்தனை போலீசார் வந்தார்கள் என்றும், நான் போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வெளிச்சத்திற்கு என்ன ஆதாரம் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், லைட் வெளிச்சத்தில் என்று சொல்லி இருக்கிறேன். அசா.2 நீலகண்டன் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மரக்கடை வைத்து நடத்துவதால் போலீசார் உதவி வேண்டும் என்ற காரணத்திற்காக, போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..)Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.